[24th January 1970

(இ) கண்காணிப்பு-லஞ்ச ஒழிப்பு இயக்குநர் அலுவலகம் இது குறித்து வழக்கு ஒன்று பதிவு செய்துள்ளதா ?

(உ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) மதுரை மாவட்டத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தின் அதிகாரிகள் மீது சில முறைகேடுகள் பற்றிய ஐயப்பாடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

(இ) ஆம்.

(உ) இப்பொருள் இன்னும் ஆய்வில் உள்ளது.

*Thanjavur Medical College Hostel.*

*48. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(*a*) the arrears payable by the inmates of the Thanjavur Medical College Hostel as on 1st July 1969 ;

(*b*) the amount of arrears over three years ; and

(c) the action taken by the Government to realise the arrears ?

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதி.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** மாண்புமிகு கல்வி-சுகாதார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்

(அ) 1—7—1969 அன்றைய நிலவரப்படி தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியில் இருக்கும் மாணவர்களினுல் செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு ?

(இ) மூன்று ஆண்டுக் காலத்திற்கு மேற்பட்ட நிலுவைத் தொகை எவ்வளவு ?

(உ) நிலுவைத் தொகையை வசூல் செய்ய அரசினுல் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** (அ) ரூ. 60,256·70.

(இ) ரூ. 11,913·14.

(உ) விடுதி பாக்கியுள்ள மாணவர்கள் விடுதியில் தங்குவதற்கு அனுமதிககப்படுவதில்லை. மேற்படி விபரங்கள் அவர்களுடைய பெற்றோர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. அத்தகைய மாணவர் கடைசி ஆண்டு எம். பி. பி.எஸ். தேர்வு தேறிய பின்னர் பாக்கி செலுத்தவேண்டியிருந்தால் அந்தப் பணம் மாணவர்க்கு அளிக்கப்படும் அவுஸ் சர்ஜன் உதவி பணத்திலிருந்து வசூலிக்கப்படும் மேலும் அத்தகைய மாணவர் செலுத்தவேண்டிய பாக்கி தொகை முழுவதுமாக செலுத்தும் வரையில் அவரது அவுஸ் சர்ஜன் பயிற்சி முடிந்தபோதிலும் அதற்குரிய நற்சான்றிதழ் அளிக்கப்படமாட்டாது.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, பல மாணவர்களிடமிருந்து பெரும் தொகை வசூலிக்கப்படாமல் இருக்கிறது என்பது என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு மேலாக ஒருவர் பணம் கொடுக்கவில்லை என்றுல், அரசாங்கச் சட்டப்படி நான் கேள்விப்பட்ட வரையில், அந்தப் பணத்தை வாங்க முடியாது என்று சொல்கிறுர்கள். மாணவர்கள் பணம் கொடுக்காமல் ஆறு மாதம் ஒரு வருஷம் இருந்து கொண்டே இருக்கிறுர்கள். பணம் கொடுக்காத மாணவர்கள் இருப்பதால், பணம் கொடுக்கிற மாணவர்கள் தொகை குறைவாக இருப்பதால், அங்கே போடப்படுகிற உணவு மோசமான நிலையில் இருப்பதாகத் தெரிகிறது. அது அரசுக்குத் தெரியுமா ? எல்லோரிட

மிருந்தும் பணத்தை உடனடியாக வசூலிக்க அரசு ஏற்பாடு செய்து, அதன் காரணமாக உணவு வகைகள் சரியாக அளிக்கும் முறையில் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல, சிலர் கொடுக்க வேண்டிய பணம் பெரும் தொகையாக இருக்கிறது. அதை எப்படி விட்டார்கள் என்று தெரியவில்லை. கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது தான். அவர்கள் ஹவுஸ் சர்ஜன் படித்தாலும், தொகை முழுவதும் அவர்கள் கட்டியதற்குப் பிறகுதான் ஹவுஸ் சர்ஜன் சர்டிபிகேட் கொடுப்போம். முதலில் அவர்கள் ஹாஸ்டலில் இருந்தால்தான், அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்கும். ஸ்காலர்ஷிப் வரும்போதுதான் பணம் கொடுக்கிற நிலை வருகிறது. டிசம்பர், ஜனவரி மாதங்களில் வரும். சில சமயங்களில் கடைசி ஐந்தாறு மாதங்களுக்குப் பணம் வசூலிக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. அந்தந்த ஆண்டிற்குரிய பணம் அந்தந்த ஆண்டில் வசூலிக்கப்பட்டிருந்தால், இவ்வளவு வந்திருக்காது. மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல, கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலமும் பணம் அதிகமாகச் சேராத வகையிலும் தக்க முயற்சிகளை எடுப்போம்.

**திரு. டி. கே. சுப்பையா :** மாணவர்கள் விடுதியில் உணவு விகிதாசாரம் அந்தந்த மாதத்திற்கு இவ்வளவு ரூபாய் செலவாகிறது என்று நிர்ணயம் செய்யப்படுகிறது. அந்த வகையில் இருந்தால், உணவுக்கான தொகை பாக்கி இருக்கும்போது, என்ன விகிதாசாரத்தில் நிர்ணயிக்கப்பட்டு எப்படி வசூலிக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன்:** செலவாகிற பணத்தைப் பார்த்து எவ்வளவு மாணவர்கள் சாப்பிடுகிறார்கள் என்று கணக்கிட்டு ஒவ்வொரு மாதமும் அந்த அளவுக்கு ஒவ்வொருவரும் இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று நிர்ணயம் செய்வார்கள். அப்படிச் செய்ததில் சிலர் இரண்டாயிரம் அளவுக்கு பாக்கி வைத்திருக்கிறார்கள். அதைத் தான் உறுப்பினர் குறிப்பிட்டார்கள். இனிமேல் ஒரு ஆண்டுக்கு மேல் பணம் கட்டாமல் இருக்கும் நிலை இல்லாத வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு முயற்சிக்கும்.

**திரு. டி. கே. சுப்பையா :** ஸ்காலர்ஷிப் வாங்கிய மாணவர்கள் பாக்கி கொடுக்க வேண்டியிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** பாக்கியுள்ளவர்கள் பெரும்பாலும் ஸ்காலர்ஷிப் மாணவர்கள்தான்.

**திரு. கே. ராஜாராம் :** அப்படியிருந்தால், அவர்களிடமிருந்து பாக்கி இருக்கும்போது, சம்பந்தப்பட்ட ஹாஸ்டல் வார்டன் இந்த ஸ்காலர்ஷிப்பை அவர்களுக்குக் கொடுத்தது தவறு அல்லவா ? அவர் பேரில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. வி. ஆர். நெடுஞ்செழியன் :** எந்த வகையில் அந்தத் தொகை கூடிற்று என்ற தகவல் இல்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கூறியதுபோல, விசாரணையில் ஈடுபட்டு அதிகமான தொகை எப்படி விட்டார்கள் என்று நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.

*Journals published by the State Institute of Education.*

***49. Q.—Thiru G. SWAMINATHAN :** Will the Hon. the Minister for Education and Health be pleased to state :—

(*a*) the names of journals published by the State Institute of Education in 1968–69 ;